IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.314/2022

DEPOSITION OF WITNESS P.W.1

| | | |
|---|---|---|
| NAME | : | LOGANATHAN |
| FATHER'S NAME | : | NARASIMMAN |
| VILLAGE | : | LAKSHMIYAMMAPURAM |
| OCCUPATION | : | MASON |
| AGE | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 9th day of January 2026.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது ஊரை சேர்ந்தவர்கள். தேதி, மாதம் ஞாபகம் இல்லை. கடந்த 2018 ஆம் வருடம் ஒரு நாள் மதியம் 02.00 மணியில் இருந்து 04.00 மணி அளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது லட்சுமயம்மாள்புரத்தில் இருந்து எனது வீட்டிற்கு வரும் வழியில் ஆஜர் எதிரிகள் இருவரும் எனது பெற்றோரை அடித்துகொண்டிருப்பதாக எனது ஊரை சேர்ந்த பெரியவர் ஒருவர் என்னிடம் வீட்டில் வந்து சொன்னார். பின்னர் நான் சென்று எனது அப்பாவை மேல்பட்டி ஆரம்ப சுகாதா நிலையத்திற்கு அழைத்து சென்றேன். பின்னர் அங்கு இருந்து குடியாத்தம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். எனது அப்பாவிற்கு இடுப்பிற்கு கீழ் அடிப்பட்டு இருந்தது. முகத்திலும் உள் காயம் இருந்தது. பின்னர் மேல்பட்டி காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியிடப்படுகிறது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யதார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**